# ஈஸ்வர் இராணுவம் மற்றும் காவலர் பயிற்சி மையம்

## 9ம் வகுப்பு தமிழ் புதிய பாடத்திட்டம்( இரண்டாம் பருவம்)

1. **பொருத்துக:**

1. சிறுபஞ்சமூலம் - அ. காப்பிய இலக்கியம்
2. குடும்ப விளக்கு - ஆ. சங்க இலக்கியம்
3. சீவகசிந்தாமணி - இ. அற இலக்கியம்
4. குறுந்தொகை - ஈ. தற்கால இலக்கியம்

**அ. 1-இ, 2-4, 3-அ, 4- ஆ**

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக?

அ. கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம் ஆ. கடி, உறு, கூர், கழி

இ. வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான் **ஈ. இன், கூட, கிறு, அம்பு**

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ. சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

ஆ. இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

**இ. என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லை!**

ஈ. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க?

1. “ஆ” என்பது எதிர்மறை இடைநிலை
2. வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு
3. வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்

அ. ஆ, இ, சரி: அ தவறு ஆ. அ,இ, சரி: ஆ தவறு **இ. மூன்றும் சரி** ஈ. மூன்றும் தவறு

5. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ. பெயரெச்சம், உவமைத்தொகை ஆ. எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ. வினையெச்சம், உவமை **ஈ. எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை**

6 அ.ஃகசாலை என்பது ----------- த்தைக் குறிக்கும்?

அ. அங்காடிகள் அமைந்துள்ள இடம் ஆ. யவனர்கள் இருக்கின்ற இடம்

**இ. நாணயங்கள் அச்சடிக்கும் இடம்** ஈ. அரேபியர்களின் பந்தர் இடம்

7. கூற்று 1 - காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகமாகும்.
கூற்று 2 - வண்டியூர் என்னும் ஊர் காஞ்சி மாநகரத்தில் அமைந்துள்ளது.

அ. கூற்று 1,2 சரி ஆ. கூற்று 1,2 தவறு

இ. கூற்று 2 சரி, 1 தவறு **ஈ. கூற்று 1 சரி, 2 தவறு**

ESWAR ACADEMY

8. “யவனப்பிரியா” என்பது எதனைக் குறிக்கும்?
**அ. மிளகு** ஆ. முத்து இ. சங்கு ஈ. தந்தம்

9. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள்?
அ. பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆ. குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து
**இ. மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு** ஈ. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை

10. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க?
1. காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும், அகலமாகவும் இருந்தது
2. பகலில் இயங்கும் கடைகள் நாளங்காடிகள்
அ. காவிரியாற்றின் கழிமுகம் எதற்காக அமைந்திருந்தது? - பகலில் இயங்கும் கடைகள் எவ்விதம் அழைக்கப்பட்டன.
**ஆ. காவிரியாற்றின் கழிமுகம் எவ்வாறு அமைந்திருந்தது? - பகலில் இயங்கும் கடைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன**
இ. காவிரியாற்றின் கழிமுகம் எங்கு அமைந்திருந்தது? - பகலில் கடைகள் எவ்வாறு இயங்கின?
ஈ. காவிரியாற்றின் கழிமுகம் எதனால் அமைந்திருந்தது? - பகலில் இயங்கும் கடைகள் எப்படி அழைக்கப்பட்டன?

11. பல்லவர் காலச் சிற்பகலைக்குச் சிறந்த சான்று ---------
**அ. மாமல்லபுரம்** ஆ. பிள்ளையார்பட்டி இ. திரிபுவனவீரேசுவரம் ஈ. தாடிக்கொம்பு

12. “பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்” நிலப்பகுதி ------
அ. குறிஞ்சி ஆ. நெய்தல் **இ. முல்லை** ஈ. கெடுதல்

13. மரவேர் என்பது -------- புணர்ச்சி?
அ. இயல்பு ஆ. திரிதல் இ. தோன்றல் **ஈ. கெடுதல்**

14. “அதிரப் புகுதக் கனாக் கண்டேன்” - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
அ. கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
ஆ. தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
இ. ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
**ஈ. ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்**

15. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ----------?
அ. விலங்கு உருவங்கள் **ஆ. தீர்த்தங்கரர் உருவங்கள்**
இ. தெய்வ உருவங்கள் ஈ. நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்



ESWAR ACADEMY

ESWAR ACADEMY

For More

ESWAR ARMY AND POLICE COACHING CENTRE

SEKKAPATTY BATLAGUNDU DINDIGUL DT

MOB:9940719961 WHATS APP: 8526837318